**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

| **நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)** |
|---|

**நவம்பர், திசம்பர் – 2014**

**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'உலகம் சுற்றினேன்' – யாருடைய படைப்பு?
2. கவிதை வகைமைகளில் தொன்மையானது எது?
3. வெண்பாவின் ஓசை என்ன?
4. 'தாய்ப்பிள்ளை உறவாக'த் தமிழை நேசிக்கும் கவிஞர் யார்?
5. வஞ்சி நெடும்பாட்டு எனப்படும் நூல் எது?
6. மனப்பாடம் செய்வதற்கு எந்நடை ஏற்றது?
7. 'குறிஞ்சித் தேன்' படைத்த நாவலாசிரியர் யார்?

8. மு.வரதராசனாரின் முதல் நாவல் எது?

9. சங்கர்லால் என்ற பாத்திரத்தை உருவாக்கியவர் யார்?

10. ஆங்கில நாடக ஆசிரியர்களில் ஒருவரைக் குறிப்பிடுக.

11. பள்ளு நாடக உறுப்பினர்கள் எந்நில மக்கள்?

12. 'தமிழ் நாடகத் தந்தை' எனப்படுபவர் யார்?

13. உரைநடையையும் செய்யுள் வகைகளுள் ஒன்றாகக் குறித்த நூல் எது?

14. இறையனார் களவியல் நூற்பாக்கள் எத்தனை?

15. ஆறுமுக நாவலரின் நூல்களில் ஒன்றினைக் கூறுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. கவிதை குறித்துப் புலமைப் பித்தன் கூறுவன யாவை?

2. 'வாயுறை வாழ்த்து' – விளக்குக.

3. மேத்தாவின் புதுக்கவிதை குறித்த புதுக்கவிதையைத் தருக.

4. படைப்பாளியின் தகுதிகளைக் கூறுக.

5. வட்டார நாவல் – விளக்குக.

6. கதை கூறும் உத்தி என்றால் என்ன?

7. பாத்திரப் படைப்பில் தலைமைப் பாத்திரம் என்றால் என்ன?

8. பிரபஞ்சனின் சமூக நாவல்கள் குறித்து எழுதுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ்ச் சிறுகதைகளின் போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) உலக நாடகத் தோற்றத்தை விவரிக்க.

2. (அ) தமிழ் நாடகத்திற்குச் சிற்றிலக்கியங்கள் அளித்த பங்கினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதி, புதுமைப்பித்தன் இருவரும் உரைநடைக்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.

3. (அ) கட்டுரை இலக்கியம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தமிழ் நாவல்கள் நேற்றும் இன்றும் என்பது குறித்து எழுதுக.